தினமணி

## ரூ. 5.69 லட்சம் மானியத்தில் பயனாளிகளுக்கு வேளாண் இயந்திரங்கள்

First Published : 13 Mar 2012 12:45:19 PM IST

நாகர்கோவில், மார்ச் 12:÷கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ. 5.69 லட்சம் மானியத்தில் வேளாண் இயந்திரங்களை பயனாளிகளுக்கு ஆட்சியர் எஸ். நாகராஜன் திங்கள்கிழமை வழங்கினார்.
÷வேளாண் பொறியியல் துறை சார்பில் பயனாளிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் வழங்கும் நிகழ்ச்சி ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.
÷இதில் மொத்தம் ரூ. 5.69 லட்சம் மானியத்தில் விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்களை ஆட்சியர் வழங்கினார். ÷ரூ. 15.25 லட்சம் மதிப்புள்ள ஒருங்கிணைந்த நெல் அறுவடை இயந்திரம், ரீத்தாபுரம் பத்தறையைச் சேர்ந்த அ. ஜார்ஜுக்கு ரூ. 4 லட்சம் மானியத்தில் வழங்கப்பட்டது.
÷மேலும், ரூ. 2.83 லட்சம் மதிப்புள்ள 20 குதிரை சக்திக்கு குறைவான 4 சக்கர விசை களையெடுக்கும் கருவி, மணவாளக்குறிச்சியைச் சேர்ந்த இ. சுப்பையாவுக்கு ரூ. 1.25 மானியத்தில் வழங்கப்பட்டது. ÷மத்திய, மாநில அரசுகளின் நிதியுதவியுடன் விவசாயத்தில் துல்லிய மேலாண்மை திட்டத்தின்கீழ் அழகன்பாறையைச் சேர்ந்த டி. கிருஷ்ணகுமாருக்கு ரூ. 44 ஆயிரத்து 80 மானியத்தில், ரூ. 1.15 லட்சம் மதிப்புள்ள விசை உழுவை இயந்திரம் வழங்கப்பட்டது.
÷நிகழ்ச்சியில் வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் சாம் செல்வராஜ், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் டபிள்யூ போஸ்லின் வின்ஸ்டன் சேம், உதவி செயற்பொறியாளர்கள் டி. கோலப்பபிள்ளை, எஸ். ஜாகிர் உசேன், பாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பிசான சாகுபடி முடிந்தது; பேச்சிப்பாறை அணை மூடல்

First Published : 13 Mar 2012 12:45:06 PM IST

நாகர்கோவில், மார்ச் 12: பேச்சிப்பாறை அணையிலிருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிடுவது ஞாயிற்றுக்கிழமையுடன் நிறுத்தப்பட்டு அணையும் மூடப்பட்டது.
கன்னியாகுமரி மாவட்ட விவசாயத்துக்கு நீராதாரமாக விளங்குவது பேச்சிப்பாறை மற்றும் பெருஞ்சாணி அணைகள். இந்த இரு அணைகளும் ஜூன் மாதம் விவசாயத்துக்காக திறக்கப்படுவது வழக்கம்.

இந்த அணைகள் மூலம் கல்குளம், தோவாளை, அகஸ்தீஸ்வரம் வட்டத்திலுள்ள சுமார் 40 ஆயிரத்துக்கு மேற்பட்ட நிலங்கள் பாசன வசதியைப் பெற்று வருகின்றன.
கோதையாறு பாசனத் திட்டத்தில் உள்ள பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றாறு 1, சிற்றாறு 2 ஆகிய நான்கு அணைகளில் உள்ள தண்ணீர் குமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்ட ஆயக்கட்டு நிலங்களுக்கு பாசன வசதியை அளித்து வருகிறது.
பிசான சாகுபடி முடிந்து அறுவடைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. எனவே, இனி தண்ணீர் தேவை இல்லாததால், பேச்சிப்பாறை அணையில் இருந்து பிசானப் பருவத்துக்குத் திறந்துவிடப்பட்ட தண்ணீர் தற்போது நிறுத்தப்பட்டு அணையும் மூடப்பட்டது.
மொத்த கொள்ளளவு 48 அடி கொண்ட பேச்சிப்பாறை அணையில் 8.90 அடி தண்ணீர் உள்ளது.
கடந்த 10 நாள்களுக்கு முன்னர் சிற்றாறு 1, சிற்றாறு 1 அணைகள் அடைக்கப்பட்டன.
மண்டைக்காடு திருவிழா நடைபெற்று வருவதால் பெருஞ்சாணி அணையில் இருந்து பி.பி. சானலுக்கு தண்ணீர் விடப்பட்டுள்ளது. மொத்த கொள்ளளவு 77 அடி கொண்ட பெருஞ்சாணி அணையில் தற்போதைய நீர்மட்டம் 39.80 அடியாக உள்ளது.

## வெள்ளரிக்காய் விலை வீழ்ச்சி: விவசாயிகள் கவலை

First Published : 13 Mar 2012 01:25:47 PM IST

களக்காடு, மார்ச் 12: களக்காட்டில் வெள்ளரிக்காய் விலை வீழ்ச்சியடைந்துள்ளதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.
களக்காடு வட்டாரத்தில் நெல், வாழை பயிர்களுக்கு அடுத்தப்படியாக வெள்ளரிக்காயை விவசாயிகள் அதிகளவில் விரும்பி பயிரிடுகின்றனர்.
இங்கிருந்து காவல்கிணறு, நாகர்கோவில் வடசேரி பகுதிகளில் உள்ள சந்தைகளுக்கு வெள்ளரிக்காய் விற்பனைக்காகக் கொண்டு செல்லப்படுகிறது.
கடந்த மாதங்களில் கிலோ ரூ.10 முதல் ரூ.15 வரை விற்பனையான வெள்ளிக்காய், இப்போது சந்தைகளில் கிலோ ரூ.1-க்கு விற்பனையாகிறது.
இந்த விலை வீழ்ச்சியால் விவசாயிகள் பெரும் கவலையடைந்துள்ளனர்.
காய் பறிக்க ஆள்கள் கூலி, சந்தைகளுக்கு கொண்டு செல்ல வாகனக் கட்டணம் ஆகியவை பெருமளவில் உயர்ந்துள்ள நிலையில் வெள்ளரிக்காய் கிலோ ரூ.1-க்கு விற்பனையாவதால் பெரும் நஷ்டத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்கின்றனர் விவசாயிகள்.
இதுகுறித்து விவசாயி துரை கூறியதாவது:
கடந்த ஆண்டு சந்தைகளில் வெள்ளரிக்காய் கிலோ ரூ.10 முதல் 15 வரை விற்பனையானது.
இதனால் போதிய லாபம் கிடைத்தது. இதைநம்பி ஏராளமான விவசாயிகள் ஆர்வத்தோடு

வெள்ளரிக்காய் பயிரிட்டோம். ஆனால், இப்போது 50 கிலோ கொண்ட மூடை ஒன்றுக்கு ரூ.40 மட்டுமே கிடைக்கிறது. இதனால் பெருத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்றார் அவர்.
களக்காட்டில் காய்கனி கடைகளில் வெள்ளரிக்காய் குவித்து வைக்கப்பட்டுள்ளன. இவை, கிலோ ரூ.5-க்கு விற்பனையாகிறது.
அதிக நீர் சத்துடன், சூட்டையும் தணிக்கும் மருத்துவகுணம் வெள்ளரிக்காயில் உள்ளது.
வெயிலின் உக்கிரம் அதிகரித்துள்ள இத் தருணத்திலேயே வெள்ளரிக்காயின் விலை வீழ்ச்சியடைந்திருப்பதால் விவசாயிகள் பெரும் தவிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

## கோபி: ரூ.5.75 லட்சத்துக்கு வாழைத்தார் விற்பனை

First Published : 13 Mar 2012 11:05:35 AM IST

கோபி, மார்ச் 12: கோபி வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் ரூ.5.75 லட்சத்துக்கு வாழைத்தார்கள் விற்பனை செய்யப்பட்டது.
கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாழைத்தார் ஏலம் சனிக்கிழமை நடைபெற்றது. இதில் கோபி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 6 ஆயிரம் வாழைத்தார்களை கொண்டு வந்தனர்.
ஏல விற்பனை விவரம்: கதலி ரகம் கிலோவுக்கு ரூ.21.50-ம், நேந்திரன் ரூ.16-க்கும் விற்பனை ஆனது. ரொபஸ்டா ரகம் தாருக்கு ரூ.220-க்கும், பச்சைநாடன் ரூ.180-க்கும், பூவன் ரூ.250-க்கும், செவ்வாழை தாருக்கு ரூ.475-க்கும், மொந்தன் ரூ.190-க்கும், தேன்வாழை ரூ.390-க்கும், ரஸ்தாளி ரூ.275-க்கும் விற்பனை ஆனது. மொத்தம் ரூ.5 லட்சத்து 75 ஆயிரத்துக்கு விற்பனை ஆனது.
இதேபோல, இங்கு நடைபெற்ற தேங்காய் ஏல விற்பனைக்கு 10 ஆயிரம் தேங்காய்களை விவசாயிகள் கொண்டு வந்திருந்தனர். தேங்காய்க்கு அதிகபட்சமாக ரூ.8.60-க்கும், குறைந்தபட்சமாக ரூ.4-க்கும் சராசரியாக ரூ.6-க்கும் விற்பனை ஆ

## பட்டுக்கூடு விலை சரிவு

First Published : 13 Mar 2012 11:05:28 AM IST
கோபி, மார்ச் 12: உற்பத்தி அதிகரித்ததால், சந்தையில் பட்டுக்கூடு விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது.
கோபி பகுதிக்குட்பட்ட பொலவக்காளிபாளையம், பாரியூர், நாதிபாளையம், நல்லகவுண்டன்பாளையம், கடுக்காம்பாளையம், ஒத்தக்குதிரை, பொம்மநாயக்கன்பாளையம்

மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் 2 ஆயிரத்துக்கும் அதிகமான ஏக்கர் பரப்பளவில் மல்பெரி செடி சாகுபடி செய்யப்பட்டுள்ளது.மல்பெரி செடிகளில் மாவுப் பூச்சிகளின் தாக்குதல்காரணமாக, கடந்த ஆண்டு பட்டுக்கூடு உற்பத்தி பாதிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து மாவுப்பூச்சிகளைக் கட்டுப்படுத்த வேளாண்துறை, பட்டு வளர்ச்சித்துறை சார்பில் ஒட்டுண்ணிகள் உற்பத்தி செய்யப்பட்டு, மல்பெரி செடிகளில் விடப்பட்டது.இவை மாவுப்பூச்சிகளை அழித்ததால், தற்போது கோபி பகுதிகளில் மல்பெரி செடி செழித்து வளர்ந்து உள்ளது. கோபி பகுதியில் வெள்ளை பட்டுக்கூடு, மஞ்சள் பட்டுக்கூடு உள்ளிட்ட 2 வகையான ரகங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இப்பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் பட்டுக்கூடுகள் தர்மபுரி, கோவை உள்ளிட்ட பகுதிகளில் நடைபெறும் பட்டுக்கூடு சந்தைக்கு விற்பனைக்காக கொண்டு செல்லப்படுகிறது.இந்நிலையில், இந்த வாரம் தர்மபுரி சந்தையில் நடைபெற்ற பட்டுக்கூடு ஏலத்தில், வெள்ளை பட்டுக்கூடு கிலோவுக்கு அதிகபட்சமாக ரூ.240-க்கும், குறைந்தபட்சமாக ரூ.185-க்கும் சராசரியாக ரூ.219.29-க்கும் விற்பனையானது.மஞ்சள் பட்டுக்கூடு அதிகபட்சமாக ரூ.192-க்கும், குறைந்தபட்சமாக ரூ.140-க்கும், சராசரியாக ரூ.171.29-க்கும் விற்பனையானது மாவுப்பூச்சி கட்டுப்படுத்தப்பட்டாலும், கோடைகாலம் துவங்கியுள்ளதால், கோபிசெட்டிபாளையம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் பட்டுக்கூடு உற்பத்தி அதிகரித்து உள்ளது. இதனால், சந்தைகளில் விலை சரிவு ஏற்பட்டுள்ளது.கடந்த 15 நாட்களுக்கு முன்பு வெள்ளை பட்டுக்கூடு கிலோவுக்கு அதிகபட்சமாக ரூ.300 வரை விற்பனை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : மார்ச் 14,2012,00:00 IST

**மல்லிகையில் ரகங்கள்**: இந்தியாவில் சாகுபடி செய்யப்படும் 24,000 எக்டர் நிலப்பரப்பில் ஜாஸ்மினம் இன மலர்கள் மட்டுமே 8000 எக்டர் நிலப்பரப்பில் பயிரிடப்படுகின்றன. வணிக ரீதியாக 3 வகையான மல்லிகை சிற்றினங்கள் பயிரிடப் படுகின்றன. அவை குண்டுமல்லி, ஜாதிமல்லி மற்றும் முல்லை வகைகளாகும்.





**1. குண்டுமல்லி:** ஜாஸ்மினம் சம்பக் (போல்டு இருவாச்சி, ஊசிமல்லி); போல்டு - இரட்டை மொகரா, ஒற்றை மொகரா, ராமநாதபுரம் குண்டுமல்லி. இருவாச்சி - கஸ்தூரி மல்லி, சோயா, மதண்டன், லாங் பிளவர் ராமபாணம், மதுரியா. ஊசிமல்லி - சூஜிமல்லி "சிங்கப்பூரில் மணக்கும் மதுரை குண்டுமல்லி' என்ற பிரபலமான வழக்கு சொல்லுக்கேற்ப தமிழகத்திலிருந்து சிங்கப்பூர் போன்ற கிழக்கிந்திய நாடுகளுக்கு குண்டுமல்லி ஏற்றுமதி பிரபலம் அடைந்து வருகிறது. சிறிய அளவில் மல்லிகை மலர்கள் சிலோன், மலேசியா, அமெரிக்கா மற்றும் அரபு நாடுகளுக்கு இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

**2. பிச்சிப்பூ அல்லது ஜாதிமல்லி**: (ஜாஸ்மினம் கிளாண்டிபுளோரம்) - பெங்களூரு, லக்னோ, திம்பாபுரம், கோயம் புத்தூர் ஒயிட், டிரிப்ளாய்டு மற்றும் தென்காசி வகைகள் இந்தியா வைத் தாயகமாகக் கொண்ட பிச்சிப்பூ ஸ்வே னிஸ்டனிலா, கேண்டகோனியன் மல்லி என்று பல பெயர்களால் சிறப்பித்து கூறப்படுகிறது. கோ.1, கோ.2 ஆகியவை உயர்விளைச்சல் ரகங்களாகும். எக்டருக்கு ஆண்டுக்கு 10,000 - 11,510 கிலோ மகசூல்.

**3. முல்லை**: (ஜாஸ்மினம் ஆரிகுலேட்டம்) - மலர்கள் மற்ற ஜாஸ்மின் இன மலர்களைவிடவும்

திரண்ட மலர் மொட்டு மற்றும் காம்புகளைக் கொண்டுஇருக்கும். பாரிமுல்லை - இது தேர்வு மூலம் உருவாக்கப் பட்டது. இலை கொப்பு ளங்களை உண்டாக்கும் சிலந்திப்பூச்சி மற்றும் இலைகள் சிறு கொத்தாக தோன்றும் நோய்க்கு (பில்லோடி) எதிர்ப்பு சக்தியைக் கொண்டுள்ளது. ஆண்டுதோறும் எக்டருக்கு 7800 கிலோ மகசூல் கொடுக்கவல்லது. கோ.1, கோ.2 - உயர் விளைச்சல் ரகங்கள் எக்டருக்கு 8800 - 11,200 கிலோ மகசூல் கொடுக்கக்கூடியவை.

பிச்சிப்பூ பெரும்பாலும் கவர்ச்சியான இளம் சிவப்புநிற காம்புகளைக் கொண்டிருப்பதாலும் மற்ற ஜாஸ்மின் இன மலர்களைவிட அதிக வாசனை பெற்று விளங்குவதாலும் மலர்களிலிருந்து வாசனை மெழுகு மற்றும் வாசனை எண்ணெய் தயாரிக்கப்பட்டு நறுமண பொருட்கள் தயாரிக்கும் தொழிலில் பெருமளவு பயன்படுத்தப்படுகிறது. பிச்சியிலிருந்து (0.25 முதல் 0.31 சதவீதம்) கிடைக்கும் வாசனை மெழுகு, முல்லையைவிட (0.31 முதல் 0.34 சதவீதம்) குறைவாக இருப்பினும் சிறந்த மறுமணத்தாலும் மற்ற சிறப்பு குணங்களாலும் அது உலகச்சந்தையில் முல்லை வாசனை மெழுகைவிட நல்ல விலைபெறுகின்றது. ஜாதிமல்லி வாசனை மெழுகு உலகச்சந்தையில் கிலோ ஒன்றுக்கு சுமார் ரூ.35,000 விலையும், மெழுகை சுத்தப்படுத்தி பிரித்தெடுக்கப்படும் வாசனை எண்ணெய் கிலோ ரூ.1.5 லட்சத்திற்கும் விற்கப்படுகிறது.

முல்லை மலர்கள் உதிரிப்பூக்களாகவும் தொடுக்கப்பட்ட சரங்கள் மற்றும் வேணிகளாக பெண்களின் கூந்தலில் அணிவதற்கு பெருமளவில் பயன்படுகிறது. மேலும் திருவிழாக் காலங்களில் மலர் அலங்காரம் செய்வதற்கும் இம்மலர்கள் பெருமளவில் பயன்படுகின்றன.- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்

**"இயற்கை சீற்றத்தை சமாளிக்க பயிர்க்காப்பீடு அவசியம்'**

பதிவு செய்த நாள் : மார்ச் 14,2012,00:00 IST

கருத்தை பதிவு செய்ய

மனிதனின் உயிர்பாதுகாப்புக்கு "லைப்' இன்சூரன்ஸ் போல, பயிர் பாதுகாப்புக்கும் திட்டம் உள்ளது. இந்தியாவில் 2003 வரை பொது காப்பீட்டுக் கழகம் பயிர் காப்பீட்டை அமல்படுத்தியது. அதன்பின் தேசிய வேளாண்மை காப்பீட்டு திட்டம் என்ற அரசு நிறுவனம் செயல்படுத்துகிறது. தற்போது மத்திய அரசுடன் இணைந்து, தமிழக விவசாய துறை தமிழகத்தில் காப்பீடு திட்டங்களை அமல்படுத்துகிறது.

தமிழக விவசாயிகளில் 18 முதல் 20 சதவீதம் பேர்தான் பயிர்காப்பீடு செய்துள்ளனர். சிலர்

காப்பீடு என்பது வீண்செலவு என கருதுகின்றனர். சில இடங்களில் இயற்கை சீற்ற ஆபத்து குறைவு தான். இதுவே காப்பீடு குறைய காரணமாக உள்ளது.

ஆனால் எந்த நேரம் என்ன நடக்கும் என சொல்ல முடியாது. புயல், வெள்ளம்போல இயற்கை சீற்றத்துடன் பூச்சி, நோய் தாக்குதலும் ஏற்படலாம் அல் லவா? எனவே காப்பீடு அவசியம் என்பதை உணர வேண்டும்.
இன்சூரன்ஸ் கமிட்டியில் விவசாய, காப்பீடு துறை அதிகாரிகள் உள்ளனர். யூனியன் அளவில் விவசாயம் குறித்த விபரங்களை வேளாண்மை உதவி இயக்குனர்கள் சேகரித்துள்ளனர். இதில் மண்வளம், பயிர்வளம், நிலத்தின் தன்மை போன்றவை அடிப்படையில் பயிர்காப்பீடு செய்யப்படும். மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிவிக்கப்பட்ட வட்டாரங்களில் பயிர்களுக்கு காப்பீடு செய்யப்படும். தமிழகத்தில் 30 மாவட்டங்களில் 822 குறுவட்டங்கள் அறிவிக்கப் பட்டவையாக உள்ளன.

நெல், சோளம், கம்பு, ராகி, மக்காச்சோளம், துவரை, உளுந்து, பச்சை பயறு, நிலக்கடலை, எள், சூரியகாந்தி, பருத்தி, உருளைக் கிழங்கு, வெங்காயம், மஞ்சள், வாழை, மரவள்ளிக் கிழங்கு, இஞ்சி, அன்னாசி போன்றவற்றிற்கு காப்பீடு வசதி உண்டு. இவற்றிற்கு வருவாய் அடிப்படையில் இழப்பீடு வழங்கப்படும். ஒரு ஏக்கரில் பயிர்செய்யப்பட்ட வாழையால் கிடைக்கும் லாபம், முதலீட்டு தொகை அளவை பொறுத்து இழப்பீடு கிடைக்கும். இயற்கை சீற்றம், பூச்சித்தாக்குதல், நோய் போன்ற காரணங்களால் நஷ்டம் ஏற்படும்போது இழப்பீட்டை பெறலாம்.

நிலப்பரப்பு, பயிர்வகை, தட்பவெப்ப நிலையை பொறுத்து விவசாயிகள் செலுத்தும் தொகை மாறுபடலாம். ஒரு பயிரை விதைத்த பின் அறுவடை செய்ய ஓராண்டு ஆகும் என்றால், அக்காலம் முழுமைக்கும் காப்பீடு செய்ய வேண்டும். தோட்டக்கலை பயிர்களுக்கு காப்பீடு தொகை அதிகம். ஏனெனில் அவை செலவு மிகுந்தவை என்பதே காரணம். ஒரு விவசாயி வங்கியில் கடன் பெற்று, ஒரு ஏக்கர் நிலத்தில் வாழைத் தோட்டம் அமைத்தால், ஒரு முறை காப்பீடு தொகையாக ரூ. 19 ஆயிரத்து 603 செலுத்த வேண்டும். கடன்பெறாத விவசாயி ரூ. 17 ஆயிரத்து 642 செலுத்த வேண்டும். வங்கிக் கடன் பெறுவோர் கட்டாயம் காப்பீடு செய்ய வேண்டும்.

காப்பீடு செய்ய விரும்புவோர் நிலங்களின் பட்டா, சிட்டா அட்டை, அடங்கல் போன்ற ஆவணங்களை ஒரு தேசிய வங்கி, வணி கவங்கி, மண்டல கிராம வங்கி அல்லது தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் கொடுத்து காப்பீடு செய்யலாம். மேலும் விபரங்களுக்கு விவசாயத்துறையின் மாவட்ட இணைஇயக்குனர்கள், யூனியன் அளவில் உதவி இயக்குனர்கள் மற்றும் உதவி அலுவலர்களை அணுகலாம்.

## மானாவாரி பருத்தி விதைக்கும்போது கடைபிடிக்க வேண்டிய தொழில்நுட்பங்கள்

பதிவு செய்த நாள் : மார்ச் 14,2012,00:00 IST

பருத்தியில் வேரழுகல் நோய், வாடல் நோய், இலைக்கருகல் நோய் என பல்வேறு நோய்கள் விதை மூலம் தாக்குகின்றன. பூசண வித்துக்கள் விதையின் மேல் மற்றும் உட்புறம் தங்கியிருக் கின்றன. விதை முளைக்கும்போது பூசண வித்துக்களும் முளைத்து நோயினை உண்டாக்கி சேதம் விளைவிக்கின்றன. விதைமூலம் பரவும் நோய்களைத் தடுக்க விதைநேர்த்திசெய்வது அவசியம்.

* பருத்தி விதைக்கும் முன் விதைநேர்த்தி செய்தல் அவசியம். ஒரு கிலோ விதைக்கு பத்து கிராம் வீதம் சூடோமோனாஸ் புளூரசன்ஸ் என்ற உயிரியல் காரணி கொண்டு விதைப்பதற்கு சற்று முன்னர் விதைநேர்த்தி செய்ய வேண்டும்.
* சம வயதுள்ள ரகத்தை யாவரும் தேர்ந்தெடுத்து ஏக காலத்தில் (ஒரு வாரத்திற்குள்) விதைத்திட வேண்டும்.
* வயலைச் சுற்றிலும் உள்ள பூச்சிகளுக்கு மாற்றுணவாகப் பயன்படும் செடிகள், களைகளை அகற்றிச் சுத்தமாக வைக்க வேண்டும்.
* தொழு உரம் மற்றும் வேப்பம் புண்ணாக்கு இடுவது பூச்சி மற்றும் நோய் தாக்குதலைக் குறைக்கும். (வேரழுகல், வாடல், நூற்புழு, தண்டுக்கூன்வண்டு, தரைக்கூன்வண்டு, வேர்ப்புழு)
* நன்மை தரும் பூச்சிகளான பொரிவண்டுகளின் பெருக்கத்திற்கு ஊடுபயிராக தட்டைப்பயறு பயிரிட வேண்டும்.
* ஓரப்பயிராக ஆமணக்கு பயிரிட வேண்டும். அதன்மூலம் புரொடீனியாப் புழுக்களின் தாக்குதலைக் கட்டுப்படுத்த முடியும். புரொடீனியாப் புழுக்களின் தாய் அந்துகளைக் கவர்ந்து முட்டையிட வைக்கும். முட்டைகளும், இளம் புழுக்களும் உள்ள ஆமணக்கு இலைகளை பறித்து அழிக்க வேண்டும்.
* கிரைசோபா, குளவிகள் போன்ற நன்மை தரும் பூச்சிகளின் பெருக்கத்திற்காக ஊடுபயிராக 20 சால் பருத்திக்கு ஒரு சால் மக்காச்சோளம் பயிரிட வேண்டும்.

முனைவர் எஸ்.ஜெயராஜன் நெல்சன்,பேராசிரியர் மற்றும் தலைவர்,பருத்தி ஆராய்ச்சி நிலையம், ஸ்ரீவில்லிபுத்தூர்-626 125.

## வெளிநாடுகளில் மவுசு அதிகரிப்பு:தமிழகத்தில் மிளகு விலை உயர்வு



மார்ச் 14,2012,00:21

சேலம்:இந்திய மிளகுக்கு வெளிநாடுகளில் மவுசு அதிகரித்துள்ளதால், தமிழகத்தில் மிளகு விலை கிலோவுக்கு, 60 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.உலக நாடுகளில் மிளகு உற்பத்தியில், இந்தியா மூன்றாம் இடத்தில் உள்ளது. இந்தியாவில், மிளகு உற்பத்தில் கேரளா முதலிடத்தில் உள்ளது. நடப்பாண்டு, கேரளாவிலும், தமிழகத்தில் தேனி, நாகர்கோவில், ஏற்காடு, கொடைக்கானல், ஊட்டி, தேக்கடி உள்ளிட்ட மலைப்பிரதேசங்களிலும் எதிர்பார்த்த அளவு மிளகு விளைச்சல் இல்லை. மிளகு உற்பத்தியில் உலகளவில் பிரசித்தி பெற்ற பிரேசில், வியட்நாம், இந்தோனேசியா, மலேசியா ஆகிய நாடுகளிலும், மிளகு விளைச்சல் குறைந்துள்ளது.

இதன் காரணமாக அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில், இந்திய மிளகுக்கு வரவேற்பு அதிகரித்துள்ளது. இந்தியாவில் உற்பத்தியாகும், 48 ஆயிரம் டன் மிளகில், 22 ஆயிரம் டன் மிளகு அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.இந்தியாவை விட, வெளிநாடுகளில் மிளகுக்கு அதிகபடியான விலை கிடைப்பதால், வியாபாரிகள் அதிகளவில் மிளகை அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத் துவங்கியுள்ளனர். இதனால், இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் மிளகுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு, கிலோவுக்கு, 60 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. கடந்த வாரம் கிலோ, 380 ரூபாய்க்கு விற்ற முதல் தர மிளகு, தற்போது 440 ரூபாய்க்கு விற்பனையானது. இரண்டாம் ரகம் கிலோ, 310 ரூபாய்க்கு விற்றது 360 ரூபாய்க்கும், மூன்றாம் ரகம் கிலோ, 270 ரூபாய்க்கு விற்றது, 320 ரூபாய்க்கும் விற்கிறது.

இது குறித்து சேலம் மிளகு வியாபாரி குணசீலன் கூறியதாவது:மருந்து தயாரிப்பில் முக்கிய பங்கு வகிக்கும் மிளகுக்கு, அமெரிக்காவில் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அந்நாட்டுக்கு மிளகை ஏற்றுமதி செய்து வந்த பிரேசில், இந்தோனேசியா, மலேசியா ஆகிய நாடுகள் சொந்த தேவையை கருத்தில் கொண்டு, மிளகு ஏற்றுமதியை குறைத்துக் கொண்டன. இதன் காரணமாக இந்திய மிளகுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு, விலை உயர்ந்துள்ளது. இதை சாதகமாக்கி, வியாபாரிகள்

மிளகை பதுக்கி வைத்துள்ளனர். பதுக்கலை தடுத்தால் மட்டுமே விலை குறைய வாய்ப்பு உள்ளது. இவ்வாறு குணசீலன் கூறினார்.

## வான்கோழி வளர்ப்பு குறித்து இலவச பயிற்சி

பதிவு செய்த நாள் : மார்ச் 14,2012,03:39 IST

கருத்தை பதிவு செய்ய

நாமக்கல்: "நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், 15ம் தேதி, "வான் கோழி வளர்ப்பில் நோய் மேலாண்மை' என்ற தலைப்பில் ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நடக்க உள்ளது' என, அதன் ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், நாளை (15ம் தேதி) வான்கோழி வளர்ப்பில் நோய் மேலாண்மை என்ற தலைப்பில், ஒரு நாள் இலவச பயிற்சி நடக்க உள்ளது. பயிற்சியில், பண்ணைகளில் வளர்க்கப்படும் வான்கோழி ரகம், வீட்டமைப்பு தீவனம் அளிக்கும் முறை, நோய் தடுப்பு முறை, முதலுதவி செய்தல் உள்ளிட்டவை குறித்து பயிற்சி அளிக்கப்பட உள்ளது. பயிற்சியில் விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர் என அனைத்து தரப்பினரும் பங்கேற்கலாம். பயிற்சியில் பங்கேற்க விருப்பம் உள்ளோர், இன்று (14ம் தேதி)க்குள் வேளாண் அறிவியல் நிலையத்துக்கு நேரில் வந்தோ அல்லது 04286-266345, 266244 மற்றும் 266244 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு பெயர் பதிவு செய்ய வேண்டும்.

## கிலோ ரூ.50 க்கு விற்ற மல்லிகை

பதிவு செய்த நாள் : மார்ச் 14,2012,01:08 IST

கருத்தை பதிவு செய்ய

மதுரை :மதுரை மாட்டுத்தாவணி பூ மார்க்கெட்டிற்கு, மல்லிகை வரத்து சீராக இருப்பதால், நேற்று கிலோ ரூ.50க்கு விற்கப்பட்டது. மற்ற பூ விலை குறித்து, சங்கத் தலைவர் சோ.ராமச்சந்திரன் கூறியதாவது :ஒரு கிலோ பிச்சிப்பூ ரூ.150, கனகாம்பரம் ரூ.200, அரளி ரூ.40, ரோஜா ரூ.50, சம்பங்கி ரூ.50, மரிக்கொழுந்து ரூ.30, கோழிக்கொண்டை ரூ.40, மெட்ராஸ் மல்லி ரூ.80, செவ்வந்தி ரூ.80, கேந்தி ரூ.20க்கு விற்கப்பட்டது, என்றார்.

**களை கட்டும் திராட்சை**

பதிவு செய்த நாள் : மார்ச் 14,2012,01:07 IST

கருத்தை பதிவு செய்ய

மதுரை :மதுரையில் திராட்சை சீசன் களைகட்டியுள்ள போதிலும், விலை குறையவில்லை. நேற்று ஒரு கிலோ பன்னீர் திராட்சை ரூ.40, மஸ்கட் திராட்சை ரூ.100, சோனா திராட்சை ரூ.70க்கு விற்கப்பட்டது.

மற்ற பழங்கள் விலை குறித்து, யானைக்கல் வியாபாரி செந்தில் கூறியதாவது : வாஷிங்டன் ஆப்பிள் ரூ.140, நியூசிலாந்து ஆப்பிள் ரூ.160, சீனா ஆப்பிள் ரூ.140, நாக்பூர் ஆரஞ்சு ரூ.60, மால்டா ஆரஞ்சு ரூ.60, அன்னாசி ரூ.30, பப்பாளி ரூ.15, தர்பூசணி ரூ.12, சீனா பேரிக்காய் ரூ.90, சப்போட்டா ரூ.20, கிர்னிப்பழம் ரூ.30, துரியன் பழம் ரூ.400, நெல்லிக்காய் ரூ.40, காபூல் மாதுளை ரூ.160, சீட்லெஸ் மாதுளை ரூ.110க்கு விற்கப்பட்டது, என்றார்.

**விவசாயிகளின் இழப்பை ஈடுகட்ட புதிய திட்டம்**

First Published : 14 Mar 2012 12:00:00 AM IST

புது தில்லி, மார்ச் 13: விவசாயிகளின் இழப்பை ஈடுகட்ட புதிய திட்டம் அமல்படுத்தப்பட்டிருப்பதாக மத்திய வேளாண் அமைச்சர் சரத் பவார் மக்களவையில் செவ்வாய்க்கிழமை கூறினார்.

குறிப்பிட்ட சில மாநிலங்களில் உருளைக்கிழங்கு, வெங்காயம் ஆகியவற்றின் விலை வீழ்ச்சியடைந்திருப்பதால் விவசாயிகள் பெரும் இழப்பைச் சந்தித்து வருவதாக மக்களவையில் எம்.பி.க்கள் தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய அமைச்சர் சரத் பவார், இப் பிரச்னைக்குத் தீர்வு காணும் வகையில் மத்திய வேளாண் அமைச்சகம் சார்பில் "சந்தை உதவித் திட்டம்' அமல்படுத்தப்பட்டுள்ளது, இதன்படி விவசாயிகள் எதிர்கொள்ளும் இழப்பை மத்திய, மாநில அரசுகள் சரிசமமாகப் பகிர்ந்து கொள்ளும் என்று விளக்கமளித்தார்.

மத்திய அரசின் தேசிய வேளாண் கூட்டுறவுச் சந்தை கூட்டமைப்பு சார்பில் இத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விவசாயிகள் அனைவரும் இத் திட்டத்தில் பயனடையலாம் என்று அவர் மேலும் கூறினார்.

வெங்காயம், உருளைக்கிழக்கு விலை வீழ்ச்சி தொடர்பாக கர்நாடகம், உத்தரப் பிரதேச மாநில அரசுகள் மத்திய அரசிடம் இதுவரை எந்த உதவியையும் கோரவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

## பாமாயில் விலை அதிகரிப்பு

பதிவு செய்த நாள் : மார்ச் 14,2012,01:04 IST

மதுரை :உற்பத்தியை விட, தேவை அதிகமாக இருப்பதால் மதுரையில் பாமாயில் விலை லிட்டருக்கு ரூ.2 அதிகரித்தது.

ஜனவரியில் லிட்டர் ரூ.59க்கு விற்ற பாமாயில், பிப்ரவரியில் ரூ.58க்கு விற்கப்பட்டது. கடந்த வாரம் ரூ.60 ஆக அதிகரித்த நிலையில், நேற்று ரூ.61க்கு விற்கப்பட்டது.

மற்ற எண்ணெய் விலை குறித்து, எண்ணெய் வியாபாரிகள் சங்க நிர்வாகி கிருஷ்ணமூர்த்தி கூறியதாவது : நேற்று ஒரு லிட்டர் கடலை எண்ணெய் ரூ.105, வனஸ்பதி ரூ.61, ரைஸ்பிரான் ஆயில் ரூ.70, சூரியகாந்தி எண்ணெய் ரூ.23, தேங்காய் எண்ணெய் ரூ.86, நல்லெண்ணெய் ரூ.130, தும்பை நல்லெண்ணெய் ரூ.145க்கு விற்கப்பட்டது, என்றார்.

## விவசாயிகளுக்கு இடுபொருட்கள்

பதிவு செய்த நாள் : மார்ச் 14,2012,00:16 IST

கருத்தை பதிவு செய்ய

கொடைக்கானல் :தோட்டக்கலை உதவி இயக்குனர் கி÷ஷார் கூறியது:

ஒரு கோடி 75 லட்சம் மதிப்பில், உயர்ரக விதை, உரங்கள், பூச்சி கொல்லி, பூஞ்சான மருந்துகள் வழங்கப்பட உள்ளன. முதற்கட்டமாக கொடைக்கானல், வில்பட்டி, பூம்பாறை, கூக்கால், பூண்டி, மன்னவனூர் கிராமங்களில் விவசாயிகளை தேர்வு செய்யஉள்ளோம். இதில் பயன் அடைய விரும்புவோர், சிட்டா, அடங்கல் நகலுடன் விண்ணப்பிக்க வேண்டும், என்றார்.

## புகையிலை சாகுபடியால் கருப்பட்டி தேவை அதிகரிப்பு

பதிவு செய்த நாள் : மார்ச் 14,2012,02:00 IST

கருத்தை பதிவு செய்ய

கோபிசெட்டிபாளையம்: கோடை வெயில் காரணமாக கோபி மற்றும் நம்பியூர் பகுதியில் பனை கருப்பட்டி உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. புகையிலை சாகுபடி அதிகரிப்பால் கருப்பட்டி தேவை அதிகரித்துள்ளது.

தமிழகத்தில் கள் இறக்க தடை விதிக்கப்பட்டதால், கருப்பட்டி உற்பத்தியில், ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் பனை மரங்களில் இருந்தும், ஜூன் முதல் அக்டோபர் வரை தென்னையில் இருந்தும் பதநீரை இறக்கி, கருப்பட்டி தயாரிக்கப்படுகிறது.

கோபி பகுதிக்குட்பட்ட கோபி, சிறுவலூர், காட்டுச்சாலை, மீன் கிணறு, காக்கிப்பாளையம், குருமந்தூர், குன்னத்தூர், கடத்தூர், அயலூர், மல்லிபாளையம், நரிக்குட்டை, அலையபாளையம், சன்னகுழி, பாலபாளையம், கோசனம், தாழ்குனி, கொளப்பலூர், தீர்த்தாம்பாளையம், கெட்டிசெவியூர், நம்பியூர் பகுதிகளில் அதிகளவில் பனை மரங்கள் உள்ளன. வானம் பார்த்த பூமியான இப்பகுதிகளில் பனை தொழிலை நம்பி, 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் உள்ளன.

பனை பதநீருக்கு தற்போது சீஸன் என்பதால், கோபி, சிறுவலூர் பகுதிகளில் கருப்பட்டி வெல்லம் உற்பத்தி சூடுபிடித்துள்ளது. போதிய மழை இல்லாததால் பனைமரங்களில் பதநீர் உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஒரு பனை மரத்தில் தினமும் ஆறு லிட்டர் பதநீர் கிடைக்கும். தற்போது, இரண்டு லிட்டர் மட்டுமே கிடைக்கிறது. 18 லிட்டர் பனை பதநீரை காய்ச்சினால்தான் 10 கிலோ கருப்பட்டி கிடைக்க வாய்ப்புண்டு. மழை காரணமாக பதநீர் உற்பத்தி குறைவால், கருப்பட்டி உற்பத்தியும் குறைந்து விட்டது.

பனை கருப்பட்டி வரத்து குறைந்து வருவதால் விலை கணிசமாக உயர்ந்துள்ளது. கிலோ, 50 முதல் 60 ரூபாய் வரை விலை கிடைக்கிறது.

கோபி, நம்பியூர் உள்பட சுற்றுவட்டார பகுதிகளில் நடப்பாண்டு அதிகளவில் புகையிலை பயிரிடப்பட்டுள்ளது. புகையிலையை பதப்படுத்த, பனை கருப்பட்டி அவசியம் தேவை. கேரளாவுக்கும் அதிகளவில் பனை கருப்பட்டி ஏற்றுமதியாகிறது. இந்நிலையில் கருப்பட்டி உற்பத்தி குறைவால், வரும் மாதங்களில் விலை மேலும் உயர வாய்ப்புண்டு. இதனால் கோபி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள விவசாயிகள் பனை கருப்பட்டியை உற்பத்தி செய்வதில் தீவிரம் காட்டி வருகின்றனர்.

கருப்பட்டி உற்பத்தியாளர்கள் கூறியதாவது:

கோடை வெயில் அதிகரித்துள்ளதால் பதனீர் உற்பத்தி வெகுவாக குறைந்துள்ளது. ஜனவரி முதல் மே மாதம் வரை சீஸன் காலமாகும். மழை பெய்து குளிர்ச்சியான காலங்களில் ஒரு மாதத்தில் இரண்டு முதல் எட்டு லிட்டர் பதனீர் கிடைக்கும். கோடை காலத்தில் ஒரு லிட்டர் பதனீர் கிடைப்பதே அரிதாக உள்ளது. கருப்பட்டி உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

பனை வெல்லம் வரத்து குறைவு காரணமாக நடப்பாண்டு துவக்கத்திலேயே, 10 கிலோ கருப்பட்டி, 500 முதல் 550 ரூபாய் வரை விலை போனது. இப்பகுதியில் உற்பத்தியாகும் கருப்பட்டி கேரளாவுக்கு ஆயுர்வேத மருந்து தயாரிக்கவும், தமிழகத்தில் புகையிலை பதப்படுத்தவும் பயன்படுகிறது. இதனால், கருப்பட்டி தேவை அதிகரித்துள்ளது. கோடையில் உற்பத்தி மேலும் பாதிக்கும். விலை உயர வாய்ப்புள்ளது.இவ்வாறு அவர்கள் கூறினர்.

## களையெடுக்கும் கருவியைபயன்படுத்தும் விவசாயிகள்

பதிவு செய்த நாள் : மார்ச் 13,2012,23:58 IST

கருத்தை பதிவு செய்ய

தேனி :விவசாயிகள் மத்தியில் களையெடுக்கும் கருவியின் பயன்பாடு அதிகரித்து வருகிறது. விவசாய கூலி தொழிலாளர்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையில் மாற்று வழிமுறைகளை விவசாயிகள் தேட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

தற்போது விவசாயிகள் மத்தியில் பிரபலமாகி வரும் கருவி களையெடுக்கும் கருவி. இதன் விலை 22 ஆயிரம் ரூபாய். இதில் 50 சதவீதம் விவசாய பொறியியல் துறை மானியம் வழங்குகிறது. பல பணியாளர்கள் செய்யும் வேலையை ஒரு களையெடுக்கும் கருவி செய்து முடித்து விடுகிறது. இதனால் விவசாயிகளுக்கு செலவு குறைவதோடு, பணிகளும் வேகமாக தடையின்றி நடக்கின்றன. எனவே பெரியகுளம், போடி, தேனி பகுதி விவசாயிகள் அதிகளவு களையெடுக்கும் கருவியை பயன்படுத்தி வருகின்றனர்.

## பப்பாளி பால் உற்பத்தி சூடுபிடித்தது

பதிவு செய்த நாள் : மார்ச் 13,2012,22:47 IST

கருத்தை பதிவு செய்ய

பொங்கலூர் : பொங்கலூர் வட்டாரத்தில் மாவுப்பூச்சி தொல்லை தீர்ந்ததால், பப்பாளி பால் உற்பத்தி சூடுபிடித்துள்ளது.

பொங்கலூர் வட்டாரத்தில், பப்பாளியில் இருந்து பால் எடுப்பதற்காகவே, அதிகளவில் சாகு படி செய் யப்படுகிறது. பப்பாளி பால், மருந்து, அழகுசாதன பொருட்கள், பேஸ்ட் உள்ளிட்ட பொருட் கள் தயாரிக்க பயன்படுவதால், இதற்கு எப்போதும் கிராக்கி நிலவுகிறது. கோவையை சேர்ந்த தனியார் நிறுவனம் விவசாயிகளிடம் இருந்து பப்பாளி பாலை நேரடியாக கொள்முதல் செய்து, பவுடராக மாற்றி, வெளிநாடுகளுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது.

கடந்த சில ஆண்டுகளாக மாவுப்பூச்சி தாக்குதல் தீவிரமடைந்ததால், பப்பாளி மரங்கள் அழிந்தன. இதனால், பப்பாளி சாகுபடி செய்வதை விவசாயி கள் கைவிடும் நிலை ஏற்பட்டது. பொங்கலூர் தொட்டம்பட்டி, மேட்டுக் கடை, தாராபுரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்த, பப்பாளி பால் கொள்முதல் நிலையங்களும் மூடப்படும் நிலை ஏற்பட்டது.
கடந்தாண்டு ஓரளவு மழை பெய்ததாலும், மாவுப்பூச்சிகளை கட்டுப்படுத்தும் ஒட்டுண்ணிகளை வேளாண் துறை மற்றும் வேளாண் பல்கலை சார்பில் விவசாயிகளுக்கு வினியோகம் செய் ததாலும், மாவுப்பூச்சிகளின் இனப்பெருக்கம் பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டது.
இதனால், மீண்டும் பப்பாளி சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். கடந்தாண்டு சாகுபடி செய்த பப்பாளி மரங்கள் தற்போது காய்ப்புக்கு வந்துள்ளன. இதனால், பப்பாளி பால் எடுக்கும் தொழி லும் சூடுபிடித்துள்ளது. பால் எடுப்பதில் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் மூலம் பப்பாளி பால் எடுக்கப்படுகிறது.
தற்போது, தாராபுரம், ஒட்டன்சத்திரம், உடுமலை, காங்கயம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் பப்பாளி பால் கொள்முதல் செய்யப்படுகிறது. கோவை, திருப்பூர் உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து மாதந்தோறும் 25 டன் வரை பால் உற்பத்தி நடக்கிறது. விவசாயிகளிடம் இருந்து ஒரு கிலோ பப்பாளி பால் 150 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. பப்பாளி மரங்கள் 20 மாதங்கள் வரை காய்க்கும் திறனுள்ளது. இதிலிருந்து ஒரு ஏக்கர் பப்பாளியில் ஆண்டுக்கு ஒரு டன் வீதம் பால் உற்பத்தி செய்யப்படுகிறது.

## விலை இல்லாததால் மஞ்சள் விவசாயிகள் சோகம்

பதிவு செய்த நாள் : மார்ச் 13,2012,23:34 IST

கருத்தை பதிவு செய்ய

திருப்பூர் : மஞ்சள் விலை குறைந்துள்ளதால், ஏக்கருக்கு 75 ஆயிரம் ரூபாய் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மஞ்சள் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் வேதனையோடு தெரிவித்தனர்.
திருப்பூர், கோபி, ஈரோடு, தாராபுரம் உள்ளிட்ட பகுதிகளில் ஒரு லட்சம் ஏக்கர் வரை மஞ்சள் சாகுபடி செய்யப்படுகிறது. 10 மாத சாகுபடி பயிரான மஞ்சளுக்கு கடந்தாண்டு நிலவிய விலை காரணமாக அதிக லாபம் கிடைக்கும் என எதிர்பார்த்து, இப்பகுதிகளில் அதிகளவு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மற்ற பயிர் சாகுபடியைவிட, மஞ்சள் சாகுபடிக்கு முதலீடு அதிகம் என்பதோடு, விளைவிக்கும் பணி மட்டுமன்றி, அறுவடைக்குபின், அதை பக்குவப்படுத்தி, விற்பனைக்கு தயார் செய்வதும் மிகப்பெரிய பணியாக உள்ளது.
வேர், மண்ணுடன் காணப்படும் மஞ்சள் விரலி, கட்டை என இரண்டு வகையாக பிரிக்கப்படுகிறது. இதை விற்பனைக்கு தயார் செய்ய, முதலில் நீராவி மூலம் மஞ்சள்

வேகவைக்கப்படுகிறது. அதன்பின், 15 நாட்கள் வரை காயவைத்து, இயந்திரங்கள் மூலம் பாலீஷ் செய்யப்படுகிறது.கடந்தாண்டு விதைப்பின்போது, மஞ்சள் குவிண்டால் 17 ஆயிரம் வரை விற்று வந்துள்ளது. தற்போது, குவிண்டால் 2,800 முதல் 3,000 ரூபாய் வரை மட்டுமே விற்கிறது. வழக்கமானதைவிட இந்தாண்டு மகசூலும் குறைந்து, ஏக்கருக்கு சராசரியாக 20 குவிண்டால் மட்டுமே கிடைத்துள்ளது. இவ்வாறு மஞ்சள் சாகுபடிக்கு விதைப்பு முதல் விற்பனைக்கு தயார் செய்யும் வரை, ஏக்கருக்கு 1.50 லட்சம் ரூபாய் வரை செலவழித்த விவசாயிகள், தற்போது விலை குறைந்துள்ளதால், முதலீட்டை எடுக்க முடி யாமல், நஷ்டத்தை சந்தித்துள்ளனர். அறுவடை செய்யும் கூலி கூட கிடைக் காது என்பதால், பலர் அறுவடை பணிகளை துவக்காமல் உள்ளனர். விவசாயிகள் கூறியதாவது: மஞ்சள் சாகுபடிக்கு விதை, உரம், களை எடுத்தல் என 80 ஆயிரம் ரூபாய் வரை செலவாகியுள்ளது. அறுவடை செய்ய தோகை உரிக்க, வெட்டி எடுக்க 20 ஆயிரம் ரூபாய், மஞ்சள் வேக வைக்க விறகு, ஸ்டீம் பாய்லர் டிரம்முக்கு 55 ரூபாய், பாலீஷ் என அறுவடை செய்வதற்கான அனைத்து பணிகளுக்கும் 70 ஆயிரம் ரூபாய் செலவாகிறது. வழக்கமாக ஏக்கருக்கு 30 குவிண்டால் வரை மஞ்சள் மகசூல் இருக்கும்.

இந்தாண்டு 15 முதல் அதிகபட்சமாக 25 குவிண்டால் மட்டுமே மகசூல் கிடைத்துள்ளது. கடந்தாண்டு மஞ்சளுக்கு கிராக்கி அதிகளவு இருந்தது. குவிண்டால் 17 ஆயிரம் ரூபாய் முதல் 20 ஆயிரம் ரூபாய் வரை விலை கிடைத்தது. தங்கத்துக்கு இணையாக விலை ஏறி வந்ததால், அதிகளவு மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டது. தற்போது, குவிண்டால் 2,800 முதல் 3,000 ரூபாய் வரை மட்டுமே விற்று வருகிறது. ஒவ்வொரு விவசாயிக்கும் லட்சக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்பட் டுள்ளது. மஞ்சளுக்கு ஆதார விலை நிர்ணயித்து, அரசே கொள்முதல் செய்ய வேண்டும், என்றனர்.

## இலவம் மரத்தில் கொத்து கொத்தாய் காய்த்து தொங்கும் பஞ்சு காய்கள்

பதிவு செய்த நாள் : மார்ச் 13,2012,22:28 IST

கருத்தை பதிவு செய்ய

அவலூர்பேட்டை :மேல்மலையனூரில் இலவம் மரத்தில் கொத்து கொத்தாய் பஞ்சு காய்கள் காய்த்துள்ளன.

மேல்மலையனூர் வள்ளலார் சபை அருகில் ஏராளமான இலவம் மரங்கள் வளர்ந்துள்ளன. இங்குள்ள இலவம் மரங்களில் கொத்து கொத்தாக பஞ்சு காய்கள் விளைந்து தொங்குகின்றன. இலவம் பஞ்சு மெத்தைகள், தலையணைகள் செய்வதற்கு பயன்படுத்தப்படுகின்றன.

மிக மிருதுவாக காணப்படும் இந்த பஞ்சின் விலையும் மார்க்கெட்டில் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இலை உதிர்காலம் என்பதால் மரத்தில் இலைகள் உதிர்ந்து வெறும் காய்கள் மட்டும்

பச்சை நிறத்தில் காணப்படுகிறது.
இன்னும் ஒரு மாதத்திற்கு பின், பக்குவமான நிலையில் காய்ந்து காய்கள் வெடிக்கும் நிலை ஏற்படும். இந்தாண்டு இலவம் மரத்தில் அதிக விளைச்சல் ஏற்பட்டுள்ளதாக இப்பகுதி மக்கள் கூறுகின்றனர்

**விவசாய சாகுபடிக்கு தேவையான உரங்கள் விற்பனைக்கு தயார் நிலை**

பதிவு செய்த நாள் : மார்ச் 13,2012,22:33 IST

கருத்தை பதிவு செய்ய

விழுப்புரம் :விழுப்புரம் மாவட்டத்தில் விவசாய சாகுபடிக்கு தேவைக்கும் அதிகளவில் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளதால், விவசாயிகள் வாங்கி பயன்பெற அறிவுறுத்தப்பட்டுள்ளது.
இது குறித்து வேளாண்மை இணை இயக்குனர் சேகர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:
விழுப்புரம் மாவட்டத்திற்கு ஆண்டு தோறும் காரீப், ரபி பருவ சாகுபடிக்கு தேவையான உரங்களின் பட்டியல் வேளாண் ஆணையகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, பெறப் படும். இதற்கேற்ப வரும் காரீப் (2012ம் ஆண்டு) பருவ பயிர் சாகுபடிக்கு தேவையான உரங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, விவசாயிகளின் உபயோகத்திற்கு வழங்கப்படும். இந்தாண்டு தானே புயல் பாதிப்பிற்கு பின் விவசாயிகள் சாகுபடி செய்ய தேவையான அனைத்து வகை உரங்களும் தட்டுப்பாடின்றி கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
அனைத்து பகுதிகளுக்கும் கிடைக்க போதுமான அளவு இருப்பு பெறப்பட்டு, விநியோகம் செய்யப்படுகிறது. காரீப் பருவத்திற்கு தேவை யான யூரியா, டி.ஏ.பி., பொட்டாஷ், காம்ப்ளக்ஸ் உரங்கள் இருப்பு பெறப்பட்டு, சேமிப்பு கிடங்குகளில் வைக்கப்பட்டுள்ளது.
தற்போது வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் யூரியா 1069 மெட்ரிக் டன்னும், பொட்டாஷ் 749 மெட்ரிக் டன்னும், காம்ப்ளக்ஸ் 644 மெட்ரிக் டன்னும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.
இதேபோல் தனியார் உர விற்பனை நிலையங்களில் யூரியா 6608 மெட்ரிக் டன்னும், டி.ஏ.பி., 1525 மெட் ரிக் டன்னும், பொட்டாஷ் 1655 மெட்ரிக் டன்னும், காம்ப் ளக்ஸ் 5620 மெட்ரிக் டன்னும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.
மாவட்டத்தில் தற்போது சாகுபடி செய்யப்பட உள்ள பயிர்களின் தேவைக்கு அதிகமாகவே உரங்கள் இருப்பு உள்ளது. விவசாயிகள், ஒவ்வொரு உரத்தின் மூட்டையிலும் குறிப்பிட்டுள்ள விற்பனை விலையை மட்டும் செலுத்தி உரங்கள் வாங்கி பயன்படுத்திக் கொள்ளலாம்.

**கோடையில் அதிக மகசூல் தரும் 2 வகை காய்கறிகள்**

பதிவு செய்த நாள் : மார்ச் 13,2012,23:01 IST

கருத்தை பதிவு செய்ய

திருவள்ளூர் :கத்தரி, வெண்டை ஆகிய காய்கறிகளை கோடையில் பயிர் செய்தால், அதிக மகசூல் கிடைக்கும் என வேளாண் பேராசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து, திருவூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை அறிவியல் நிலையத்தின் தலைவர் தேவநாதன், பேராசிரியர் முத்துராமலிங்கம் ஆகியோர் கூறியதாவது:

ஒவ்வொரு பருவ காலத்திற்கேற்ற பயிர்களை பயிர் செய்தால், அதிக மகசூலை பெறலாம்.

தற்போது, கோடைக்காலம் துவங்கியுள்ளது.

இக்காலத்தில் பயிர் செய்ய வெண்டையும், கத்தரியும் உகந்த காய்கறிகள்

வீரிய ஒட்டு ரகங்கள்

கத்தரியில் அர்கா நவ்ஜீத், அப்சரா, சாயா, சியாமல் என ஆறு ரகங்கள் உள்ளன.

வெண்டையில் சக்தி, சோனாஸ், யு.எஸ்., 7109 ஆகிய இரு ரகங்கள் உள்ளன.

கத்தரி பயிர் செய்ய மே - ஜூன், அக்டோபர் - டிசம்பர், ஜனவரி - மே ஆகிய மாதங்களும், வெண்டை பயிர் செய்ய பிப்ரவரி - ஏப்ரல், ஜூன் - ஆகஸ்ட் ஆகியவை உகந்த மாதங்களாகும்.

விதையளவு

வெண்டை ஒரு ஹெக்டேருக்கு, 1.8 கிலோவும், கத்தரி ஒரு ஹெக்டேருக்கு, 200 கிராமும் பயன்படுத்த வேண்டும்.

கத்தரிக்கு டி.விரிடி, 4 கிராம், சூடோமோனாஸ் 10 கிராம், அசோஸ்பைரில்லம், 100 கிராம், பாஸ்போ பாக்டீரியா, 100 கிராம் ஆகியவையும், வெண்டைக்கு டி.விரிடி, 4 கிராம், அசோஸ்பைரில்லம், 400 கிராம் ஆகிய அளவுள்ள உரங்களை கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும். தினமும் ஒருமணி நேரம் அல்லது தேவைக்கேற்ப சொட்டுநீர் பாசனம் மூலம் நீர்ப்பாய்ச்ச வேண்டும்.

கத்தரி, வெண்டை செடிக்கு காய்த் துளைப்பான், சிலந்தி பேன், சிவப்பு சிலந்தி பேன், இலைப்புள்ளி நோய், மஞ்சள் நரம்பு நோய் மற்றும் சாம்பல் ஆகிய நோய் தாக்கும்.

இவற்றைக் கட்டுப்படுத்த, கார்பரில், புரோபினோபாஸ், குயினல்பாஸ், பெவிஸ்டின் ஆகிய பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்த வேண்டும்.

அறுவடை

வெண்டை பயிரிட்ட, 90 முதல் 100 நாட்களிலும், கத்தரி பயிரிட்ட, 50 முதல் 120 நாட்களிலும் அறுவடை செய்யலாம். வெண்டை ஒரு ஹெக்டேருக்கு, 25-30 டன்னும், கத்தரி ஒரு ஹெக்டேருக்கு, 50-60 டன்னும் மகசூல் கிடைக்கும்.

**வெள்ளை பூண்டு 25 ரூபாய்க்கு கூவிக் கூவி விற்பனை**

பதிவு செய்த நாள் : மார்ச் 13,2012,22:56 IST

கருத்தை பதிவு செய்ய

கடந்த சில மாதங்களுக்கு முன்பு, ஒரு கிலோ, 300 ரூபாய் வரை விற்ற வெள்ளை பூண்டு தற்போது, விலை சரிவு ஏற்பட்டதால், சாலையோரம், 25 ரூபாய்க்கு கூவி, கூவி விற்பனை செய்யப்படுகிறது.

சமையல் பொருட்களில் முக்கியமானதாக கருதப்படும் வெள்ளை பூண்டு விலை, கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பு உச்சத்தை அடைந்தது. முன் எப்போதும் இல்லாத அளவிற்கு, 260 முதல், 300 ரூபாய் வரை விற்பனையானது. இதனால், வெள்ளை பூண்டை, சாமானியர்கள் நினைத்துக்கூட பார்க்க முடியாத நிலை ஏற்பட்டது.

இரண்டு மாதம் வரை நீடித்த இந்த விலை உயர்வு, உற்பத்தி அதிகரிப்பால், மார்க்கெட்டிற்கு வரத்து அதிகரித்ததைத் தொடர்ந்து வெள்ளை பூண்டின் விலை படிப்படியாக குறைந்தது.

தற்போது, முதல் ரகம் பூண்டு கிலோ, 50 ரூபாய்க்கும், அதற்கடுத்த ரகம், 25 முதல் 40 ரூபாய் வரை விற்பனையாகிறது.

விலை குறைவால், தற்போது திருவள்ளூர் மாவட்டத்தில் ஆங்காங்கே, சாலையோரம் வெள்ளை பூண்டுகள் மலை போல் குவிக்கப்பட்டு, விற்பனை செய்யப்படுகிறது.

இது குறித்து பூண்டு வியாபாரி ஒருவர் கூறும்போது, ""தற்போது கோயம்பேடு மார்க்கெட்டுக்கு அதிகளவில் பூண்டு வரத்து அதிகரித்துள்ளது. நாங்கள், மொத்தமாக வாங்கி, கிலோ 25 ரூபாய் வீதம் சில்லரையில் விற்பனை செய்கிறோம்,'' என்றார்.

## தென்னங்கீற்று விற்பனை அமோகம்: விலையோ கிடுகிடு உயர்வு

பதிவு செய்த நாள் : மார்ச் 13,2012,22:58 IST

கருத்தை பதிவு செய்ய

கோடை வெயிலை சமாளிக்க கிராம மக்கள் அதிகளவில் தென்னங்கீற்று வாங்கி உபயோகிக்கின்றனர். இதனால், அதன் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில், சில நாட்களாக நாளுக்கு நாள் வெயிலின் தாக்கம் அதிகரித்து வருகிறது. மேலும், பகல் நேரத்தில் அனல் காற்றும் வீசுகிறது. இதனால், குழந்தைகள் மற்றும் முதியோர் பகல் நேரத்தில் நிம்மதியாக உறங்க முடியாமல் கடும் அவதிப்படுகின்றனர்.

வெயில் அதிகரிப்பு

காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை, பொதுமக்கள் வெயிலுக்கு பயந்து வீட்டை விட்டு வெளியே வர அச்சப்படுகின்றனர். தற்போது அடிக்கடி ஏற்படும் மின் தடையால் மின்

விசிறிகளையும் இயக்க முடியாமல் கிராம மக்கள் அவதிப்படுகின்றனர். அப்படியே மின் விசிறிகளை இயக்கினாலும், அதிலும் அனல் காற்று தான் வீசுகிறது.

தென்னங்கீற்றில் பந்தல்

வெயிலின் தாக்கத்தை தடுக்க கிராம மக்கள் தங்கள் வீட்டின் முன்பும், மேற்கூரைகளிலும் குளிர்ச்சிக்காக தென்னங்கீற்று வாங்கி பந்தல் மீது போட்டு வருகின்றனர். மாடி வீடுகளில் வசிப்பவர்கள் சிலர், மொட்டை மாடியில், தென்னங்கீற்றில் குடிசை அமைத்து வருகின்றனர். கோவில்களிலும் பக்தர்கள் வசதிக்காக, கோவில் வளாகத்தில் தென்னங்கீற்றால் பந்தல் அமைக்கப்படுகிறது. இதனால், தென்னங்கீற்றின் விலை அதிகரித்து வருகிறது.

மூன்று மடங்கு உயர்வு

கடந்தாண்டு, 25 கீற்றுகள் கொண்ட ஒரு கட்டு, 30 ரூபாய் முதல், 50 ரூபாய் வரை விற்கப்பட்டது. ஆனால் தற்போது, 25 கீற்றுகள் கொண்ட கட்டு, 100 ரூபாய் முதல், 150 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

இதனால், தென்னங்கீற்று தட்டுப்பாடும் சில பகுதிகளில் ஏற்பட்டுள்ளது.

கொளுத்தும் வெயிலால் தென்னங்கீற்றின் விலையும் கிடுகிடுவென உயர்ந்துள்ளதால், நடுத்தர மக்கள் கோடை வெயிலை எப்படி சமாளிப்பது என தவிக்கின்றனர்.

இதுகுறித்து தென்னங்கீற்று வியாபாரி பேரம்பாக்கம் சேகர் கூறும்போது, ""தற்போது வெயில் அதிகரித்து வருவதால், தென்னங்கீற்றுகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால், தென்னங்கீற்றுகளை பள்ளிப்பட்டு, ஆந்திர மாநிலம் சித்தூர், காளஹஸ்தி உட்பட பல்வேறு பகுதிகளுக்கு சென்று மொத்தமாக வாங்கி லாரியில் கொண்டு வந்து விற்பனை செய்கிறோம்.

லாரியில் கொண்டு வரும் வாடகையும் அதிகரித்துள்ளதால், தென்னங்கீற்றுகள் விலையை அதிகரித்து விற்க வேண்டியுள்ளது,'' என்றார்.

---

***காலாவதியான விதைகளை விற்கும் விற்பனையாளர் மீது நடவடிக்கை விதை ஆய்வு துணை இயக்குனர் எச்சரிக்கை***

*கோவை, மார்ச்.14–*

*காலாவதியான விதைகளை விற்கும் விற்பனையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று*

விதை ஆய்வு துணை இயக்குனர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக கோவை மாவட்ட விதை ஆய்வு துணை இயக்குனர் பொன்னுச்சாமி நடேசன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:–

விற்பனை உரிமம்

கோவை, திருப்பூர் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து விதை விற்பனையாளர்கள் தாங்கள் விதை விற்பனை உரிமங்களை காலாவதியாகும் தேதிக்கு முன்பே புதுப்பித்துக் கொள்ள வேண்டும். விதை வணிக உரிமம் 3 ஆண்டுகளுக்கு செல்லத்தக்கதாகும். புதுப்பித்தலுக்கு உரிய கட்டணத் தொகை ரூ.20–ஐ உரிய கணக்கு தலைப்பில் செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும்.

உரிமம் இல்லாமலோ அல்லது புதுப்பிக்காமலோ விதை விற்பனை செய்தால் விதை கட்டுப்பாடு ஆணை சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

விதை மாதிரிகள்

விதைகளை விற்பனை செய்யும் போது, விற்பனை ரசீதில் விதை வாங்கும் விவசாயிகளின் பெயர், ரகம், முழு முகவரி, பயிர், ரகத்தின் பெயர், குவியல் எண், காலாவதி தேதி, விவசாயி, விற்பனையாளர்களின் கையொப்பம் ஆகியவை அவசியம் இருக்க வேண்டும்.

மேலும் ஒவ்வாரு மாதமும் 5–ந் தேதிக்குள் விதை இருப்பு மற்றும் விற்பனை விவரங்களை உரிய படிவத்தில் பூர்த்தி செய்து விதை ஆய்வு துணை இயக்குனர் அலுவலகத்துக்கு அனுப்ப வேண்டும். விதை விற்பனையாளர்கள் விதை மாதிரிகளை விதை பரிசோதனை நிலையத்துக்கு அனுப்பி தரத்தை உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும். காலாவதியான விதைகளை இருப்பு வைத்து விற்பனை செய்யும் விதை விற்பனையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

## மஞ்சூர் பகுதியில் வெயிலின் தாக்கம் அதிகரிப்பு:

# தேயிலை தோட்டங்களுக்கு தண்ணீர் பாய்ச்சும் பணி தீவிரம்

மஞ்சூர், மார்ச்.14-

மஞ்சூர் பகுதியில் கடந்த சில நாட்களாக கடும் வெயில் வாட்டுவதால் விவசாயிகள் காய்கறி தோட்டங்களில் தண் ணீர் பாய்ச்சும் பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

### வறட்சி

நீலகிரி மாவட்டத்தில் கடந்த 2 மாதங்களாக மழை இல்லாமல் வெயில் அடித்து வருகிறது. பகல்வேளையில் கடும் வெயிலும், இரவு நேரத்தில் பெய்த பனிப்பொழி வின் காரணமாக கடும் வறட்சி ஏற்பட்டு உள்ளது.

கடும் வெயிலில் தாக்கத்தால் தேயிலை தோட்டங்களில் மகசூல் அறவே பாதிக்கப்பட்ட தால் விவசாயிகள் மிகவும் பாதிப்படைந்து உள்ளனர். இதனால் விவசாயிகள் வானம் பார்த்த பூமியாக இயற்கை அன்னையை வேண்டி வருகிறார்கள்.

### நாற்றுக்கள் வேருடன் வாடும் அபாயம்

மஞ்சூர் பகுதியில் தொடரும் கடும் வெயிலின் காரணமாக தேயிலை தோட்டங்கள் வாடும் நிலை ஏற்பட்டுள்ளது. சுமார் 2 ஆண்டுகள் முதல் 4 ஆண்டுகள் முன்பு பதியன் செய்த தேயிலை தோட்டங் களில் செடிகளின் நிலைமை மோசமடைந்து வரு கிறது. இந்த வெயில் இனி வரும் கோடை காலங்களில் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ள தால் ஆங்காங்கே தேயிலை தோட்டங்களில் உள்ள தேயிலை நாற் றுக்கள் வேருடன் வாடும் அபாயம் உள்ளது. இதனால் கவலையுற்ற விவசாயிகள் தேயிலை செடிகளை வெயிலின் தாக்கத்தில் இருந்து பாதுகாக்க தற்சமயம் தண்ணீர் பாய்ச்சும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறு தண்ணீர் பாய்ச்சும் பணியில் ஒரு மாத காலங்களில் தேயிலை தோட்டங்களில் பச்சையம் ஏற்பட்டு தேயிலை தோட்டங்களில் மகசூல் ஏற் படும் வாய்ப்பு உள்ளது. மேலும் ஒரு சில இடங்களில் விவசாயிகள் வானம் பார்த்த பூமியாக மழையை எதிர்பார்த்து உள்ளனர்.



மஞ்சூர் பகுதியில் ஒரு தேயிலை தோட்டத்தில் வெயிலினால் வாடிய செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்சும் பணி நடைபெற்றதை படத்தில் காணலாம்.